தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன், Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-2-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் தேசிய அளவிலான வேளாண் வணிக மேலாண்மை சந்திப்பு - பிரபந்தாஸ் 2017

பிரபந்தாஸ் 17 தேசிய அளவிலான வேளாண் தொழில் நிர்வாகத் திறன் போட்டி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேலாண்மைத் துறையில் பிப்ரவரி 17 மற்றும் 18, 2017 அன்று நடைபெற்றது. இதன் துவக்கவிழா 17-2-2017 அன்று காலை நடைபெற்றது. இதில் 200 இந்தப் போட்டியில் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலிருந்து 20 கல்லூரிகளைச் சார்ந்த 250க்கும் மேற்ப்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

செல்வி. அபர்னா அவர்களால் வரவேற்புரை வழங்கப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினர் மற்றும் பல்வேறு கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

வேளாண்மை மற்றும் ஊரக மேலாண்மைத் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். K. மகேந்திரன் அவர்கள் சிறப்புரை வழங்கினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண்மை முதன்மையர் முனைவர். S. மகிமைராஜா, மற்றும் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். C.R. ஆனந்தகுமார் ஆகியோர் சிறப்புரை வழங்கினர். இதில் மாணவர்களின் எண்ணங்களை தூண்டும் வகையிலும் மற்றும் மாணவர்களுக்குள்ள சிறப்பு அம்சங்களையும் மற்றும் தொலைநோக்கு பார்வையும் வேண்டுமென்று கூறினர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் சிறப்புரை ஆற்றினார். இதில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆதாரங்கள் மற்றும் புதிய கண்டுப்பிடிப்புகள் மற்றும் புதிய எண்ணங்களை தூண்டுவிக்கும் வகையில் சிறப்புரை ஆற்றினார். மேலும் சிறப்பு விருந்தினரான

திரு. விஜயராகவன் CEO, LEAF அவர்களை வரவேற்றார். அதன் பின்பு திரு. விஜயராகவன் அவர்களின் புதிய கண்டுப்பிடிப்பான செயற்கை உணவு தயாரித்தல் முறையைப் பற்றிக் கூறினார்.

பிரபந்தாஸ் 17 தேசிய அளவிலான வேளாண் தொழில் நிர்வாகத் திறன் போட்டியின் நிறைவு விழா 18-2-2017 அன்று நடைபெற்றது.

வேளாண் பல்கலைக்கழக முதுகலை ஆய்வு முதன்மையர் முனைவர். ராபின் அவர்கள் பிரபந்தாஸ் விழாவுக்கு வருகை தந்துள்ள மாணவர்களை வரவேற்று பாராட்டினார். மாணவர்கள் உற்பத்தித் திறனை மேம்படுத்த வேண்டும் என்றும், திறன்கள் மற்றும் சவால்களை எதிர்கொள்ளவேண்டும் என்றும் கூறினார். திறன்களை மேற்கொள்ள சவால்கள் மிக அவசியம் என்றும் இந்நிகழ்ச்சின் முக்கியநோக்கம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கு இடையோன உறவு முறையை மேம்படுத்த வழிவகுக்கிறது என்றும் கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முன்னால் மாணவர் மற்றும் பல்லவன் கிராம வங்கியின் தலைவர் திரு. சுரேஷ் அவர்கள் தன்னுடைய உரையில் கடந்த கால அனுபவத்தைப் பற்றி பேசினர். பின்பு, பிராந்திய கிராமப்புற வங்கிகளைப் பற்றி விரிவாக எடுத்துதுரைத்தார்.

பின்பு கருத்து அமர்வு பிரபந்தாஸ் நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களால் நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் தனது உரையில் போட்டி என்பது ஞானம் விரிவாக்கம் தொடர்பாகவே நடைபெறுகிறது என்றும் நல்ல சம்பளம் மட்டுமே திருப்திக்கான முக்கிய காரணம் என்றும் கூறினார்.

வேளாண்மை மற்றும் ஊரக மேலாண்மைத் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். கே. மகேந்திரன் அவர்கள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் பெயர்களை அறிவித்தார். முதுகலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட மேலாண்மை போட்டிகளில் குஜராத்தை சார்ந்த ASPEE வேளாண் வணிக மேலாண்மை நிலைய மாணவர்களும், இளநிலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட மேலாண்மைப் போட்டிகளில் மேட்டுப்பாளையம் வனவியல் கல்லூரி மாணவர்களும் வெற்றி வாகை சூடினர். ரூபாய் 1,48,500/- ரொக்கத் தொகை பரிசாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

செல்வன்.S. சிதம்பரக் கண்ணன் நான்காம் ஆண்டு இளங்கலை வேளாண் தொழில் மேலாண்மை மாணவர் நன்றியிரையாற்றினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்